**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு M. சந்திரமோகன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

******

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 03–ம் நாள்

2025–ம் ஆண்டு ஜுலை மாதம் 19–ம் நாள் சனிக்கிழமை

******

**இடைமனு எண்.5/2025 அசல் வழக்கு எண். 413/2018**

ரெங்கநாதன் சார்பாக
அதன் அதிகாரம் பெற்ற
முகவர் மூலம் பாமா ... மனுதாரர்/1–ம் பிரதிவாதி

...எதிர்...

1. சண்முகராஜ் ....1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. சார்பதிவாளர் செம்பனார்கோயில் .... 2ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 14.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு R.கார்த்திக்ராஜன் அவர்களும், எதிர்மனுதார் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளதை அனுசரித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

வழக்கில் தீர்ப்புரைக்காக போடப்பட்டுள்ள வாய்தாவினை Re–open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/எதிர்வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 1ம்பிரதிவாதியின் தாயாரும் சிறப்பு அதிகாரம் பெற்ற முகவர் ஆவார். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி மீது எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் பிரதிவாதிகள்

தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்ய வழக்கு வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கில் சிறப்பு அதிகாரம் பெற்ற முகவரான மனுதாரரை அங்கீகரிக்க கோரி மனு தாக்கல் செய்ய வேண்டி இருந்ததினால் மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் விசாரிக்க முடியவில்லை. அதனால் கடந்த 08.01.2025 அன்று மனுதாரர் தரப்பு சாட்சியத்தை Close செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ சாட்சியை விசாரிக்காமல் இருக்கவில்லை. மனுதாரர் தரப்பில் மனுதாரர் கட்சியை நிரூபிக்க கூடிய சாட்சிகளும் ஆவணங்களும் உள்ளன. மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் விசாரிக்காமலும் ஆவணங்களை குறியீடு செய்யாமலும் போனால் மனுதாரர்களுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும். அதனால் மனுதாரர் தரப்பிலான 1ம் பிரதிவாதியின் சாட்சியத்தை Close செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை Reopen செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்களுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும். எனவே, வழக்கில் தீர்ப்புரைக்காக போடப்பட்டுள்ள வாய்தாவினை Re-open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/எதிர்வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளனர்.

**3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

4. மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6.தீர்வு**

மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரி தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் வாதி மற்றும் எதிர்வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு, மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் வாதுரைக்காக பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் வாதுரைக்காக தயாராக இல்லாத காரணத்தினால், வாதி தரப்பில் மட்டும் வழக்கறிஞர் வாதுரை கேட்கப்பட்டு, அசல் வழக்கானது தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கில் சிறப்பு அதிகாரம் பெற்ற முகவரான தன்னை அங்கீகரிக்க கோரி மனு தாக்கல் செய்யவேண்டி இருந்ததினால் தங்கள் தரப்பில் சாட்சியங்கள் விசாரிக்க முடியவில்லை. அதனால் கடந்த 08.01.2025 அன்று மனுதாரர் தரப்பு சாட்சியத்தை Close செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 1-ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தையும், விசாரித்து தீர்ப்பு கூறுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக மனுதாரர் செலவுத்தொயைாக ரூ.500 ஐ 30.07.2025 தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

அழைக்க – 31.07.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/- M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

(ஓம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.5/2025–ல்
அசல் வழக்கு எண்.413/2018
நாள்.19.07.2025